221658

(7)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1989 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

*[1989 நவெம்பர் மாதம் 03 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1989, நவெம்பர் மாதம் 03 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: சதம் 30 தபாற் செலவு: சதம் 75

221658

1990-1-9 SRI LANKA

1989 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

[1989, நவம்பர் மாதம் 03 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ—ஓ 36/88

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1989 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 188 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 188 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட விடுவித்தற் கட்டளையானது, ஒன்றில்—

(அ) அது தள்ளிவைக்கப்படாமலும் அத்துடன் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான வழக்கு அத்தகைய கட்டளையின் தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்குள் மீண்டும் ஆரம்பிக்கப்படாமலுமிருக்குமிடத்து ; அல்லது

(ஆ) வழக்கு முறைப்படி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு, அத்துடன் விடுவித்தற் கட்டளை இரண்டாம் முறையும் ஆக்கப்படுமிடத்து,

விடுதலைக் கட்டளையொன்றாகச் செயற்படுதல் வேண்டும்.

ஆயின், விடுவித்தற் கட்டளையைத் தள்ளிவைப்பதற்கான விண்ணப்பமொன்று நீதிவானொருவர் முன்னிலையில் அல்லது மீளாய்வில் வேறு நீதிமன்றம் முன்னிலையில் முடிவுறாதிருக்குமிடத்து, விடுவித்தற் கட்டளையானது, ஓராண்டு காலப்பகுதியின் முடிவில், அதனைத் தள்ளிவைப்பதற்கான விண்ணப்பத்தை மறுக்கின்ற கட்டளையை நீதிவான் அல்லது அத்தகைய நீதிமன்றம் ஆக்கும் வரையில், விடுதலைக் கட்டளையொன்றாகச் செயற்படாதிருத்தல் வேண்டும்.".